செ.வெ.எண்:30 நாள்:17.02.2017

# அரியலூர் நகராட்சிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலைத்துறை பராமரிப்பில் உள்ள சாலை பணிகளை துரிதமாக சீரமைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் உத்தரவு.

அரியலூர் நகராட்சியில் தேசிய நெடுஞ்சாலைத்துறை பராமரிப்பில் உள்ள சாலை பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (17.02.2017) பார்வையிட்டு, சேதமடைந்த சாலைகளை சீரமைக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**இவ்வாய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் நகராட்சியில், அரியலூர் நகராட்சிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலைத்துறை மூலம் பேருந்துநிலைய சாலை, மாவட்ட ஆட்சியர் அலுவலக சாலை, மாவட்ட காவல் கண்காணிப்பு அலுவலக சாலை ஆகிய சாலைகள் மிகவும் சேதமடைந்து, மக்கள் பயன்படுத்துவதற்கு மிகவும் சிரமமாக உள்ளதால், அச்சாலைகளை விரைவாகவும், சீராமைக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டபட்டுள்ளது.

மேலும், அரியலூர் முன்னாள் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பசுமை குடில் நாற்காலகளையும், ஈப்பு நிறுத்தும் கட்டிட பணிகளையும் பார்வையிட்டு, ஆய்வு செய்யப்பட்டுள்ளது. பின்னர், செட்டி ஏரியில் சீரமைக்கப்பட்ட நடைபாதை மற்றும் பாலத்தினை பார்வையிட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விரைவாக கொண்டுவர உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, அரியலூர் நகராட்சிக்குட்பட்ட துரைஏரி மற்றும் சித்தேரி கரைகளில் உள்ள சீமைக்கருவேலி மரங்களை அகற்றவும், மேலும், அரியலூர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் உள்ள சீமைக்கருவேலி மரங்களை அகற்றிட ஆணையர், வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, நெடுஞ்சாலைத்துறை செயற்பொறியாளர் திரு.பழனிசாமி, செயற்பொறியாளர் (வளர்ச்சித்துறை) திரு.அருள்மொழி, அரியலூர் வட்டாட்சியர் திரு.முத்துகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.கபிலன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.